


கோடங்கிபாளையம் கிராம ஊராட்சி தலைவர்/செயல் அதிகாரி அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : முனைவர்.காவீ.பழனிச்சாமி அ.இ., அவர்கள்

நாள்: 09.02.2024

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை - பல்லடம் ஊராட்சி ஒன்றியம் - கோடங்கிபாளையம் கிராம ஊராட்சி மற்றும் கோடங்கிபாளையம் கிராமம் க.ச.எண்கள்: 363/1A1B, 363/3A1, 363/5A1A நெ.காலையில் 1.59 ஏக்கர் (அ) 6436 ச.மீ. பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் அவர்களின் உத்தரவு ந.க.எண்: CBE/LPA/IX8UISQM/2023/TCP நாள்:07.11.2023-ன்படி ம.வ./(கோ.உ.தி.கு) எண்: 526/2023 -ன் படி தொழில்நுட்ப அனுமதியும் மற்றும் திட்ட அனுமதி எண்: 610/2023
2. பல்லடம் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர எண்: 10472/2023 நாள்: 10.06.2023
3. மனுதாரர் P.தினேஷ் அவர்களின் விண்ணப்பம்
4. கோடங்கிபாளையம் கிராம ஊராட்சி வங்கி கணக்கில் வரைவோலை எண்: 013131 நாள்:23.01.2024
5. அரசாணை எண்: 71 ஊரக வளர்ச்சித்துறை நாள்: 16.06.2023
6. அரசாணை எண்: 18 வீட்டு வசதி மற்றும் நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019
7. G.No: 138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 04.06.2024
8. அரசு கடித எண்: 19113/நவம்பர் 4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாடு துறை நாள்: 30.08.2017
9. கோடங்கிபாளையம் ஊராட்சி தீர்மான எண்:10 நாள்: 07.02.2024

உத்திரவு :

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கோடங்கிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்கள்: 363/1A1B, 363/3A1, 363/5A1A -ல் நெ.காலையில் 1.59 ஏக்கர் (அ) 6436 ச.மீ. பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு

Scanned with OKEN Scanner

பார்வை 2- காணும் பல்லடம் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர எண்: 10472/2023 நாள்: 10.06.2023-ன் படி கோடங்கிபாளையம் ஊராட்சிக்கு சாலைகள், பொது உபயோகம் மற்றும் TANGEDCO இடங்களை பார்வை 3-ல் காணும் மனுதாரரால் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் அவர்களின் உத்தரவு ந.க.எண்:CBE/LPA/IX8UISQM/2023/TCP நாள்:07.11.2023-ன்படி ம.வ./(கோ.உ.தி.கு) எண்: 526/2023 -ன் படி தொழில்நுட்ப அனுமதியும் மற்றும் திட்ட அனுமதி எண்: 610/2023-ன் படி திட்ட அனுமதியும் வழங்கி உத்தரவு பெறப்பட்டுள்ளது.

பார்வை 4- காணும் கோடங்கிபாளையம் கிராம ஊராட்சி வங்கி கணக்கில் வங்கி வரைவோலை எண்: 013131 நாள்:23.01.2024-ன் படி ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்தி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 5,6,7,8-ல் காணும் அரசாணைகளின் வழிகாட்டுதலின்படி பார்வை 9-ல் காணும் இவ்வூராட்சி மன்றத் தீர்மான எண்: 10 நாள்: 07.02.2024-ன்படி இறுதி அங்கீகாரம் வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதியில் கண்டுள்ள நிபந்தனைகளின்படியும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு

நிபந்தனைகள்:

1. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் அவர்களின் உத்தரவு CBE/LPA/IX8UISQM/2023/TCP நாள்:07.11.2023-ன்படி ம.வ./(கோ.உ.தி.கு) எண்: 526/2023 -ன் படி தொழில்நுட்ப அனுமதியும் மற்றும் திட்ட அனுமதி எண்: 610/2023-ல் சுட்டிக்காட்டிய அனைத்து மனைப்பிரிவு நிபந்தனைகளும் பின்பற்றப்பட வேண்டும்.

2. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் அவர்களின் உத்தரவு ந.க.எண்: CBE/LPA/IX8UISQM/2023/TCP நாள்:07.11.2023-ன்படி ம.வ./(கோ.உ.தி.கு) எண்: 526/2023 -ன் படி தொழில்நுட்ப அனுமதியும் மற்றும் திட்ட அனுமதி எண்: 610/2023-ல் உள்ளவாறு எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

Scanned with OKEN Scanner

3. மனைப்பிரிவு அனுமதி பெறும் போது செலுத்தப்பட்ட கட்டணங்கள் தவிர வேறு ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் என்ற அறிவிப்பு கிடைத்தால் உரிமையாளர் பத்து தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளர் பொறுப்பாகும்.

4. மேலே கண்ட நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று அல்லது அனைத்தும் மீறப்பட்டால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவார்.

5. இந்த மனைப்பிரிவு அனுமதி தவறான முறையில் பெறப்பட்டதாகவோ அல்லது தவறுதலுக்கு இடம் கொடுக்க கூடியதாக இருக்கும் என செயல் அலுவலர் கருதும் பட்சத்தில் அல்லது அவருக்கு தோன்றும் உசிதமான காரணங்களை கொண்டு மனைப்பிரிவு அனுமதியை இரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ உட்பட்டதாகும்.

6. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் அவர்களின் திட்ட அனுமதி: 610/2023-ல் சுட்டிக் காட்டிய அனைத்தும் மனைப்பிரிவுகள் நிபந்தனைகள் 1 முதல் 6 வரை நிறைவு செய்த பிறகே மனைப்பிரிவு பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மான எண்ணும் நாளும் மற்றும் மனை வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனை நுழைவாயிலில் "6*4" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.

8. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்த மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.

9. மனை வரைபடம் அங்கீகாரம் 1994-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊர்கள் மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்குட்பட்டதாகும்.

10. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற வேண்டும்.

11. மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

12. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

13. மேலே கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.

இணைப்பு:

1. உள்ளூர் திட்டக்குழும உத்தரவு மற்றும் நிபந்தனைகள்.
2. மனைப்பிரிவு வரைபடம்.
3. ஊராட்சி மன்ற தீர்மான நகல்.

தலைவர்/செயல் அதிகாரி,
கோடங்கிபாளையம் கிராம ஊராட்சி,
(முதல் நிலை)
பல்லடம் வட்டாரம்,
திருப்பூர் மாவட்டம்.

பெறுநர்:

P.தினேஷ்,
4/582, திருச்சி சாலை,
காரணம்பேட்டை,
கோடங்கிபாளையம்,
பல்லடம்,
திருப்பூர்-641401.

நகல்:

1. இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்,
கதவு எண்:50, தரை மற்றும் முதல் தளம்,
பெட்ரோல் பங்க் சாலை, காந்திமாநகர், கணபதி,
கோயம்புத்தூர்-641004.

2. உதவி இயக்குநர் (நில அளவை),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர்.

3. நகர் ஊரமைப்பு இயக்குநர்,
நகர் ஊரமைப்புத்துறை அலுவலகம்,
2,3&4-ம் தளம், CMDA அலுவலகம்,
E&C மார்கெட் ரோடு, கோயம்பேடு,
சென்னை-600092.

4. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

5. வட்டாட்சியர்,
பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

6. சார்பதிவாளர்,
சார்பதிவகம், பல்லடம்.

Scanned with OKEN Scanner

மாவட்டம் : திருப்பூர்

வட்டம் : பல்லடம்

எண் : 07

கிராமம் :

பெயர் : கோடங்கிபாளையம்

புல எண் : 363

